**சார்பு நீதிமன்றம், பரமத்தி.**
முன்னிலை திரு. எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 30–ம் நாள் திங்கட்கிழமை

**இ. ம.எண்.07/2025, 08/2025 இன் அ.ச.எண். 113/2022**

செல்வராஜ் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ராமாயி
2. ரேவதி
3. மைனர்.தரனிஷ்
4. மைனர். கிருத்திக்தேவ்

(மேற்படி 3, 4–மைனர் பிரதிவாதிகளின்
காப்பாளர்/தாயார் 2–ம் பிரதிவாதி மூலம்) ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்கள் 10.06.2025–ம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.குமரேசன் அவர்கள் ஆஜராகியும், 1–முதல் 4–எதிர்மனுதாரர்கள் எதிருரை தாக்கல் செய்யாததால் எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## பொதுவான உத்தரவு

இம்மனுக்கள், அசல் தாவாவில் பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் கைரேகை பதிவேட்டில், 11.03.2013–ம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.894/2013–ற்கான கைரேகையினையும், தாவா அண்டிமாண்டில் உள்ள சீனிவாசன் கைரேகையையும் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு சென்னையில் உள்ள கைரேகை

நிபுணருக்கு அனுப்பி, அறிக்கை பெறுவதற்கு நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்ய உத்தரவிடக்கோரியும், மேற்படி கைரேகை பதிவேட்டின் அசலை பரமத்தி சார்பதிவாளர் நீதிமன்றத்தில் ஒப்படைக்க அறிவிப்பு அனுப்ப உத்தரவிடக்கோரியும் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. <u>இரு மனுக்களின் சுருக்கம்,</u>

மனுதாரர்/வாதியிடம், 1–ம் பிரதிவாதியின் மகனும், 2–ம் பிரதிவாதியின கணவரும், 3, 4 பிரதிவாதிகளின் தகப்பனாருமான லேட்.சீனிவாசன் 23.01.2022–ம் தேதியில் ரூ.9,00,000/– கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு மாதம் 1–க்கு ரூ.100/–க்கு ரூ.1/–வீதம் அசல் வட்டி சோத்து மனுதாரர்/வாதிக்கோ அல்லது மனுதாரர்/வாதி கூறும் நபர்களுக்கோ வேண்டும் போது செலுத்துவதாக ஒப்புக்கொண்டு 23.01.2022–ம் தேதியில் தாவா அண்டிமாண்டினை மனுதாரர்/வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி அண்டிமானடிக்கு உண்டான வட்டினை சீனிவாசன் 2022–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை செலுத்தி வந்துள்ளார். பின்னிட்டு 2022–ம் ஆண்டு மே மாதத்திற்கான வட்டியை செலுத்தாமல் மேற்படி சீனிவாசனி 27.06.2022 தேதியில் இண்டஸ்டேட்டா பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகி விட்டார். மேற்படி சீனிவாசன் காலமான பிறகு வாதி மேற்படி அண்டிமாண்டித்கு உண்டான அசல் மற்றும் 2022–ஆண்டு மே மாதத்தில் இருந்து வட்டித் தொகையை செலுத்துமாறு பலமுறை நேரில் கேட்டும் பிரதிவாதிகள் அண்டிமாண்டிற்கு அசல், வட்டி தொகைகளை செலுத்தவில்லை. தாவா அண்டிமாண்டிற்குண்டான அசல் மற்றும் நிலுவைவட்டி தொகைகளை செலுத்துமாறு வாதி, பிரதிவாதிகளுக்கு 22.08.2022–ம் தேதியில் பதிவு அஞ்சலின் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டதில் 2, 3, 4 பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கண்டு பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளனர். மேற்படி வழக்கில் 2, 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ன எதிர்வழக்குரையில் "தாவா அண்டிமாண்டு போர்ஜரியாக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். அதில் உள்ள கையெழுத்தோ கைரேகையோ சீனிவாசன் செய்தது கிடையாது. சீனிவாசன் இறந்த பின்னால் மோசடியான முறையில் நான் போர்ஜரி அண்டிமாண்டு மூலம் லாபம் அடைய வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என குறிப்பிட்டுள்ளனர். அதனால் நான் சீனிவாசன்

11.03.2013–ம் தேதியில் பரமத்தி சார்பதிவாளர் அலுவலக எண் 894/2013–ன்படி கிரையம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி கிரைய ஆவணத்தில் சீனிவாசன் இடது கை பெருவிரல் ரேகையும் கையெழுத்தும் செய்துள்ளார் என்றும் அதனால் தாவா அண்டிமாண்டிலுள்ள சீனிவாசனின் கைரேகையும் கிரைய ஆவணத்தில் உள்ள சீனிவாசனின் கைரேகையும். சென்னையில் உள்ள கைரேகை நிபுணருக்கு அனுப்பி ஒப்பிட்டு பாரப்பதற்காக மேற்படி கிரைய ஆவணத்தின் அசலை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டி, 2–ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு கொடுத்துள்ளார். மேற்படி அறிவிப்பினை பெற்றுக் கொண்ட 2–ம் பிரதிவாதி நாளது வரை கிரைய ஆவணத்தின் அசலை ஒப்படைக்கவில்லை. மேற்படி தாவா அண்டிமாண்டில் உள்ள சீனிவாசனின் கைரேகை போர்ஜரி என பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்து வருவதால், தாவா அண்டிமாண்டில் உள்ள கைரேகை சீனிவாசனுடையது தான் என்று நிருபிக்க வேண்டியுள்ளது. அதனால் சீனிவாசன் 11.03.2013–ம் தேதியில் பரமத்தி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 894/2013–படி கிரைய பெறும் பொழுது சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ரேகை பதிவேட்டில் கைரேகை வைத்துள்ளதால் மேற்படி கைரேகை பதிவேட்டினை பரமத்தி சார்பதிவாளர் நீதிமன்றத்தில் ஒப்படைக்க மனுவும் தாக்கல் செய்துள்ளார். கைரேகை பதிவேட்டில் உள்ள சீனிவாசன் கைரேகையையும் அண்டிமாண்டில் உள்ள சீனிவாசன் கைரேகையும் சென்னையில் மேற்படி தாவா கைரேகை நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற வேண்டியுள்ளது. அப்போது தான் பிரதிவாதிகளின் கூற்று பொன் என்று நிரூபிக்க இயலும். அதனால் தாவாவில் பரமத்தி சார்பதிவாளர் அவர்களால் ஒப்படைக்கப்பட்ட கைரேகை பதிவேட்டில் 11.03.2013–ம் தேதியிட கிரய ஆவணம் எண். 894/2013–ற்கான கைரேகையினையும் தாவா அண்டிமாண்டில் உள்ள சீனிவாசன் கைரேகையையும் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு சென்னையில் உள்ள கைரேகை நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்திரவு பிறப்பிக்க வேண்டியுள்ளது. இல்லாத பட்சத்தில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். ஆகையால், மேற்படி தாவாவில் பரமத்தி சார்பதிவாளர் அவர்களால் ஒப்படைக்கப்பட்ட கைரேகை பதிவேட்டில் 11.03.2013–ம் தேதியிட்ட கிரய

ஆவணம் எண் 894/2013–ற்கான கைரேகையினையும், தாவா அண்டிமாண்டில் உள்ள சீனிவாசன் கைரேகையையும் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு சென்னையில் உள்ள கைரேகை நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு நீதிமன்ற வழக்கறிஞர்களில் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்திரவு பிறப்பிக்க வேண்டியும், மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் கைரேகை பதிவேட்டில், 11.03.2013–ம் தேதியிட்ட கிரைய ஆவண எண்.894/2013–ற்குண்டான கைரேகை பதிவேட்டின் அசலை பரமத்தி சார்பதிவாளர் நீதிமன்றத்தில் ஒப்படைக்க அறிவிப்பு அனுப்ப உத்தரவிட வேண்டியும் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் உரிய வாய்ப்பு அளித்தும், இம்மனுக்களில் எதிருரை தாக்கல் செய்யாததால், அவர்களுக்கு எதிராக கடந்த 16.04.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. தற்போது, இம்மனுக்களில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதேனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5. தீர்வு

எதிர்மனுதாரர்கக்கு எதிராக இம்மனுக்களில், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப் பட்டு இருந்தாலும், மனுதாரர் கோரியவாறு, இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை பரிசீலக்கவேண்டியுள்ளது.

6. மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

7. மனுதாரர், அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரகள் அசல் வழக்கில் பிரதிவாதிகள். 1–ம் பிரதிவாதியின் மகனும், 2–ம் பிரதிவாதியின் கணவரும், 3, 4– பிரதிவாதிகளின் தந்தையுமான சீனிவாசன் என்பவர் கடந்த 23.01.2022–தேதியில் தாவா புரோநோட்டு எழுதிக்கொடுத்து ரூ.9,00,000/–கடனாக பெற்றார் என்றும் பின்னர் மேற்படி சீனிவாசன் கடந்த 27.06.2022–தேதியில் இறந்துவிட்டார் என்றும் மேற்படி

சீனிவாசனின் அசையும், அசையா சொத்துக்களை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் மேற்படி சீனிவாசன் தாவா புரோநோட்டின்பேரில் பெற்ற கடனை திருப்பித்தரவேண்டும் என்று கோரி, பிரதிவாதிகள் பேரில் தாவா அண்டிமாண்டுபடி தொகை வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருகிறது. எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், தாவா புரோநோட்டு போர்ஜரியாக உருவாக்கப்பட்டது என்றும் அதிலுள்ள கைரேகையும், கையெழுத்தும் சீனிவாசன் என்பவருடையது இல்லை என்றும் குறிப்பாக மறுத்துள்ளார்கள். எனவே, தாவா புரோநோட்டில் உள்ள கைரேகை தாவா புரோநோட்டை எழுதிக்கொடுத்ததாக சொல்லும் சீனிவாசன் என்பவருடையது தான் என்பதை நிரூபிக்க மனுதாரர் தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையும், மேற்படி சீனிவாசன் என்பவரின் கைரேகையையும் ஒப்பிட்டு கைரேகை நிபுணரின் அறிக்கை பெற வேண்டும் என்பதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மேலும், மேற்படி சீனிவாசன் இறந்துவிட்டதால், அவரின் கைரேகையை ஒப்பிட, மேற்படி சீனிவாசன் கடந்த 11.03.2013–தேதியில் பதிவு கிரையம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி கிரையப்பத்திரம் பதிவு செய்த ஆவணங்கள் பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் அதனால், மேற்படி கிரையம் பதிவு செய்த ஆவணங்களில் உள்ள சீனிவாசனின் கைரேகையையும், தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையையும் ஒப்பிட்டு அறிக்கை பெற வேண்டும் என்பதற்காக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால், எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுக்களில் ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஆகவே, தாவா புரோநோட்டை எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ள நிலையில், புரோநோட்டை நிரூபிக்க மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது. ஆகவே, அசல் வழக்கில் தாவா புரோநோட்டின் உண்மைத்தன்மையை அறிந்து கொள்வதற்கு மனுதாரர் கோரியுள்ள கைரேகை நிபுணரின் அறிக்கை அவசியமானது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதற்காக நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமிக்கவேண்டியதும் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேற்படி சீனிவாசனின் கைரேகையை ஒப்பிட்டு அறிக்கை பெறுவதற்காக மேற்படி சீனிவாசன் கடந்த 11.03.2013–தேதியில் கிரையம் பெற்ற கிரைய ஆவண எண்.894/2013–குண்டான மேற்படி சீனிவாசன் கைரேகை வைத்த பதிவேட்டின் அசலை பரமத்தி சார்பதிவாளல் அலுவலகத்திலிருந்து வரவழைக்கலாம் என்று முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, மேற்கண்ட பரிசீலனைகளின் முடிவில் இம்மனுக்கள் அனுமதிக்கப்படுகிறது.

9. முடிவாக, ஐ.ஏ.எண்.07/2025 08/2025 ஆகிய மனுக்கள் அனுமதிக்கப் பட்டு, தாவா புரோநோட்டில் உள்ள கைரேகையையும், கடந்த 11.03.2013–தேதியிட்ட சீனிவாசன் என்பவர் கிரையம் பெற்ற கிரைய ஆவண எண்.893/2013–பதிவேட்டில் உள்ள மேற்படி சீனிவாசனின் கைரேகையையும் ஒப்பிட்டு, அறிக்கை தாக்கல் செய்ய சென்னையில் உள்ள ஆய்வுக்கூடத்தில் ஒப்படைத்து அறிக்கை பெற ஏதுவாக வழக்கறிஞர் திரு. கே.ஆர்.மணிகண்டன் நியமிக்கப்படுகிறார். மேற்படி ஆவணங்களை நீதிமன்ற ஆணையர் பெற்று, அவைகளை The Superintendent of Police (FP), Tamil Nadu Finger Print Bureau, (SCRB), No.95, Santhome High Road, R.A.Puram, Chennai–600 028 என்ற முகவரியில் ஒப்படைத்து அதற்குரிய கட்டணத்தொகையும் செலுத்தி அவர்கள் வழங்கும் அறிக்கையை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று உத்தரவிடப் படுகிறது. மேலும், நீதிமன்ற ஆணையர் ஊதியமாக ரூ.10,000/– நிர்ணயம் செய்யப் படுகிறது. ஆணையரின் ஊதியத்தையும், ஆய்வுக்குரிய கட்டணத்தையும், மனுதாரரிடம் நேரடியாக பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேலும், மேற்படி சீனிவாசன் என்பவர் கடந்த 11.03.2013–தேதியில் கிரையம் பெற்ற கிரைய ஆவண எண்.894/2013–ஆவணத்தின் பதிவேட்டின் அசலை பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க உத்தரவிடப்படுகிறது.

வழக்கறிஞர் ஆணையர் ஊதியம் செலுத்தவும், சீனிவாசன் கிரையம் பெற்ற கடந்த 11.03.2013–தேதியில் கிரையம் பெற்ற கிரைய ஆவண எண். 894/2013– ஆவணத்தின் பதிவேட்டின் அசலை பரமத்தி சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்கவும் வாய்தா 23.07.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 30.06.2025–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.06.30 10:01:22 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>மனுதாரர், தரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.06.30 10:01:34 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.